## 3.4 2001–02 – நமக்கு நாமே திட்டம் – கிராமத் தன்னிறைவுத் திட்டம் எனப் பெயர் மாற்றம்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ்.ஒய்) துறை

அரசாணை (நிலை) எண்.216 நாள் : 27.08.2001

படிக்க :

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 16.07.2001 அன்றைய ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு
2. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் ந.க.எண்.47200/2001/தி.அ.4, நாள்.18.07.2001

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 16.07.2001 அன்று ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்தி வரும் திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

2. 2001–2002–ம் நிதியாண்டில் நமக்கு நாமே திட்டத்தின் பெயரை ‘‘கிராமத் தன்னிறைவுத் திட்டம்‘‘ என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(அ) பெண்களுக்கான ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு வளாகம் (Rural Integrated Sanitary Complex for Women) அமைத்தல்.

(ஆ) தெருவிளக்குகள் அமைத்தல்

(இ) கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலக கட்டிடம் ஊராட்சி அலுவலகத்தினை சேர்ந்தாற்போல் கட்டித் தருதல்.

3. இத்திட்டத்திற்கான கணக்குத் தலைப்பு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்படுகிறது.

‘‘2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800 ஏனைய செலவினம் – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – J.W. – கிராம தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துதல் –09 உதவி மானியங்கள் –02 மூலதனச் செலவுக்கான மானியங்கள். (து.தொ.கு.எண்.2515 –.00–800 J.W. 0925‘‘

4. இவ்வாணைத் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை நிதித்துறை அ.சா.கு.எண் முறையே 158/எஸ்/2001, நாள்.25.07.2001 மற்றும் 00389/ஊவ/2001–1, நாள்.23.8.2001 இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என். கோவிந்தன்**
அரசு செயலாளர்